# வண்ணச்சரபம்
# தண்டபாணி சுவாமிகள் அருளிய
# ஏழு பதிகம்

பதிப்பாளர்

மூ.சத்தியா

நெறியாளர்

முனைவர் ய.மணிகண்டன்

விரிவுரையாளர்

தமிழ் இலக்கியத்துறை

சென்னைப் பல்கலைக்கழகம்

சென்னை - 600 005.

மே - 2006

# வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் அருளிய ஏழுபதிகம்

சுவடியியலும் பதிப்பியலும் பட்டயப்பேற்றிற்காகச்
சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு
அளிக்கப்பெறும் பதிப்பேடு


பதிப்பு

**மூ. சத்தியா**

நெறியாளர்

**முனைவர் ய.மணிகண்டன்**

விரிவுரையாளர்

தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை - 600 005.



மே 2006

சுவடியிலும் பதிப்பியலும் பட்டயப் பேற்றிற்காக
சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு அளிக்கப்பெறும்
பதிப்பேடு எண்: 43010518

## நெறியாளர் சான்றிதழ்

முனைவர் ய. மணிகண்டன்
விவுரையாளர்
தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை – 600 005

**"ஏழு பதிகம்"** எனும் தலைப்பிலான ஓலைச் சுவடியைச் **சுவடியியலும் பதிப்பியலும்** எனும் பட்டயம் பெறுவதற்காக மூ. சத்தியா அவர்கள் என் மேற்பார்வையில் பதிப்புச் செய்தார் என்றும் இப்பதிப்பு இவர்தம் தனி முயற்சியில் உருவானது என்றும் சான்றளிக்கிறேன்

நாள் :

இடம் :

நெறியாளர்

**(ய. மணிகண்டன்)**

## பதிப்பாளர் உறுதிமொழி

**மூ.சத்தியா**
முதுகலை இரண்டாம் ஆண்டு.
தமிழ் இலக்கியதுறை,
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை - 600 005

"**சுவடியியலும் பதிப்பியலும்**" என்னும் பட்டயப் பேற்றிற்காகச் சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு அளிக்கப்பெறும் **ஏழு பதிகம்** எனும் தலைப்பிலான இப்பதிப்பேடு என் தனி முயற்சியில் உருவானது என்று உறுதியளிக்கிறேன்.

பதிப்பாளர்

நாள்:

இடம்: (மூ. சத்தியா)

# நன்றியுரை

சென்னைப் பல்கலைக்கழக தமிழ் இலக்கியத் துறையில் முதுகலை சேர வாய்ப்பளித்தமைக்கும் சுவடியியல் பட்டய வகுப்பில் சேர வாய்ப்பளித்து சுவடியியல் பட்டய பயிற்சி வகுப்பில் சிறப்பான முறையில் பயிற்சி கொடுத்த தமிழ் இலக்கியத்துறை தலைவர் **பேராசிரியர் வீ. அரசு** அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சுவடியை எம்முறையில் படிக்க பதிப்பிக்க வேண்டுமெனப் பயிற்சியளித்தும், இவ்வகுப்பு தொடர்பாக நூலைப் பதிப்பிப்பதால் எனக்கு ஊக்கமளித்தும் வழிகாட்டிய நெறியாளர் **முனைவர் ய. மணிகண்டன்** அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சுவடியியல் மற்றும் பதிப்பியல் பட்ட ஆய் வேட்டிற்காகச் சுவடி அளித்து உதவியதோடு மட்டுமின்றி சுவடியில் உள்ள பாடல்களுக்கு யாப்பு வடிவம் கூறி பதப்பிரிப்பு செய்து உதவி புரிந்த அகராதித் துறையில் பணியாற்றும் சுவடியில் அறிஞர் அய்யா ப. **வெ. நாகராசன்** அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என் முன்னேற்றத்திற்குப் பல்வேறு வகையிலும் உறுதுணையாக இருந்துவரும் என் குடும்பத்தாருக்கும் நான்

கல்விகற்க பெருந்துணையாக இருந்த சித்தப்பா எஸ். அறிதாஸ் அவர்களுக்கும் என் நன்றியினை உரித்தாக்குகிறேன் மேலும் இந்நூலைப் பதிப்பிக்க இன்னும் சிற்சில வகையில் உதவி புரிந்த முனைவர் பட்ட ஆய்வாளர்கள் **ஸ்ரீ- பிரேம்குமார் வி. அருள்** மற்றும் என் நண்பர்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

சிறப்பான முறையில் தட்டச்சு செய்து கொடுத்த **டுடேகிராபிக்ஸ்** நிறுவனத்திற்கு என் நன்றி.

மூ . சத்தியா

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| | பதிப்புரை | 1-6 |
| | செய்யுள் | 7-42 |
| | பின்னிணைப்பு | |
| 1. | செய்யுள் முதற்குறிப்பகராதி | 43-47 |
| 2. | சொல்லடைவு | 48-57 |
| | துணை நூற் பட்டியல் | 58 |

# பதிப்புரை

காலம் இலக்கியங்களின் தோற்றத்திற்குக் காரணமாகிறது. ஒவ்வொரு காலத்திலும் நிகழும் நிகழ்ச்சிகள், நிகழ்ச்சிகளால் உருவான மாற்றங்கள் முதலியன இலக்கியங்கள் கருக்களாகின்றன. காலத்தின் கோலத்தால் தாக்குண்ட படைப்பாளன் நிகழ்வின் விளைவை உள்வாங்கும்போது படைப்பு அவனுள் கருக்கொண்டு உலக அனுபவத்தையும் கலந்து வாசகர்கள் சுவைக்கும் வண்ணம் படைப்பினைப் படைத்தளிக்கின்றான்.

தனிமனிதச் சிந்தனையின் வாயிலாக உருவாகுகின்ற தனிப்பட்ட ஒரு புதிய இலக்கிய வகை அதன் கருவாலும் அடிக்கருத்தாளம் படைப்பாளனின் புலமையாலும் உயர் பெறுகின்றது. அப்புதிய இலக்கிய வகையைப் படித்து துய்க்கும் வாசகன் மனதால் அப்படைப்பின் தன்மையை ஆராய்ந்து உணரும்போது அவனுக்கு ஏற்பட்ட சில அனுபவங்கள், அவனுள் விளையும் கொள்கைகள் முதலியன தொடர்ந்து வரும் காலங்களில் அவ்விலக்கியம் பற்றிய பார்வையை விரிவாக்குகின்றன. அப்படைப்பைப் போலவே இன்னொரு படைப்பை உருவாக்கினால் என்ன என்று மற்றொரு படைப்பாளனுக்கு ஏற்படுகின்ற உந்துதல் அவ்விலக்கிய

வகையின் வளர்ச்சிப்போக்கு பல்வேறு, படைப்பாளர்களில் படைப்புகள் மூலமாக மெருகேற்றப்படும்போது தமிழ் இலக்கிய வகையாக முகிழ்ந்து நிற்கின்றது. பிறகு அதே இலக்கிய வகையில் புதிய கூறுகள் புகுத்தப்படுகின்றன அல்லது பல மாற்றங்களுடன் அவ்விலக்கிய வகையே புதுவடிவம் பெறுகின்றது. அவ்வகையில் 'பதிக' இலக்கிய வகையையும் கொள்ளலாம். இதில் தண்டபாணி சுவாமிகளின் 'ஏழு பதிகம்' என்னும் நூல் 'அம்மனை' பாட்டுடைத் தலைவியாகக் கொண்டு 19-ம் நூற்றாண்டில் பாடப்பட்டது.

## நூலாசிரியர் குறிப்பு

திருநெல்வேலியில் செந்தில் நாயகம் பிள்ளை, பேச்சிமுத்து அம்மை என்பவருக்கு மகனாக விகாரி ஆண்டு கார்த்திகைத் திங்கள் பதினாறாம் நாள் சனிக்கிழமையன்று (22-22-1839) பிறந்தார். சங்கரலிங்கம் என்ற இயற்பெயரையுடைய இவர் தமது ஐம்பதாண்டுக் காலத்தில் நூறாயிரம் கவிதைகளுக்கு மேல் பாடியுள்ளார்.

வண்ணச் சரபம், திருப்புகழ்ச்சுவாமிகள், முருகதாசர் தண்டபாணி சுவாமிகள் எனப் பல பெயர்களையும் கொண்டு திகழும் இவர், வாழ்க்கை வரலாறு, தன் வரலாறு, இலக்கணம், தல புராணம், துதிப்பனுவல், சாத்திர நூல்கள் இவற்றுடன்

பிள்ளைத்தமிழ், கலம்பகம், அந்தாதி, உலா, கோவை, சதகம் எனச் சிற்றிலக்கியங்களிலும் தடம் பதித்து விளங்கியுள்ளார்.

**சுவடி அமைப்பு**

'ஏழு பதிகம்' என்னும் இந்த ஓலை சுவடி ஆறு சுவடிகளில் 79 பாடல்கள் அமைய சுவடியின் இரண்டு பக்கங்களிலும் பக்கத்திற்கு பனிரெண்டு அடிகள் எனப் பாடல்கள் அமைந்து காணப்படுகின்றது. சுவடியானது 34 x 3.5 செ.மீ. என்ற அளவினை உடையது. இந்து சுவடியானது சேதமின்றி முழுமையாக காணப்படுகின்றது. சுவடியின் ஒவ்வொரு பக்கத்திலும் சுவடி எண்ணும் ஒவ்வொரு பாடலின் ஆரம்பத்திலும் அவற்றுக்குரிய எண்ணும் தமிழில் அமைந்திருக்க எழுத்துக்கள் இடைவெளி இன்றித் தொடர்ச்சியாக அமைந்துள்ளன. பேச்சு வழக்கு சொற்களே பெரும்பாலும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

மெய்யெழுத்துக்கள் வரும் இடங்களிலெல்லாம் மேலே புள்ளி இல்லாமலும், துணைக்கால் வடிவத்திலேயே 'ர' கரமும் அமைந்து காணப்படுகிறது.

**பதிகம் சில விளக்கங்கள்:**

பத்து, நூறு முதலிய எண் தொகைகளில் எழுந்த இலக்கியங்களோ பலப்பல. சங்க நூல்களுள் ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து என்பதை குறிப்பிடத்தக்கவை.

பத்துப்பாடல்கள் கொண்டது பதிகம் எனவும் நூறு முதலிய பாடல்கள் கொண்டது 'சதகம்' எனவும் பெயர் பெறுகின்றன. திருக்குறளும் நாலாடியாரும் அதிகாரத்திற்குப் பத்துப் பாடல்களைக் கொண்டு விளங்குகின்றன. இடைக்காலத்தில் பக்திப் பாடல்கள் பாடிய தொண்டர்களும் பதிகங்களாகவே தம் துதிப் பாக்களைப் பாடியுள்ளனர். தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா முதலிய பத்திப் பனுவல்கள் பதிகப் பாமாலைகளே. நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தில் வரும் பதிகங்கள் திருமொழிகள் என வழங்கப்படுகின்றன.

சங்க இலக்கியம் முதல் இன்றைய காலக்கட்டம் வரை பதிக இலக்கியங்கள் பாடப்பட்()தான் வருகின்றன. சான்றாக 20-ம் நூற்றாண்டில் பாடப்பட்ட பதிக இலக்கியங்கள் சில.

1. முத்து குமாரப்பிள்ளை - திரு குடந்தை மாரியம்மன் பதிகம்
2. பாலசுப்பிரமணியன் தே.எம், திருவாசகமணி
    1. ஆதிகுமரகுருபரர் திருப்பதிகம்
    2. கள்ளழகர் திருப்பதிகம்
3. மகாதேவ முதலியார்
    1. திருச்செந்தூர் முருகப் பதிகம்
    2. பழனியாண்டவர் பதிகம்.

4. மணிவாசக கரணாலய அடிகள்

1. திருப்பரகுன்ற பதிகம்

2. திருசெந்தூர் பதிகம்

3. திருபழனி பதிகம்

4. திருஏரக பதிகம்

5. பழமுதிர்ச்சோலை பதிகம்

6. குன்றுதோராடல் பதிகம்

7. விரலிமலை பதிகம்

8. திருத்தணிகாசலம் பதிகம்

## நூல் அமைப்பு

'ஏழு பதிகம்' என்னும் இந்நூலை இதுவரை யாரும் இன்னும் பதிப்பிக்கப்படவில்லை. இந்நூலின் தொடக்கத்தில் இடப்புறத்தில் தெய்வமே துணை! ஏழு பதிகம் என்னும் நூல் தேவி சகாயம் என்றும், நூலின் இறுதியில் குருபாதமே கதி! சந்துரு சங்கார வடிவேல் சகாயம் என்றும் எழுதப்பட்டுள்ளது. இதில் மொத்தம் எழுபத்தொன்பது பாடல்கள் காணப்படுகிறது.

நூலின் தொடக்கத்தில் காப்பு பாடல்க ெண்பா வடிவிலும், ஏழு பதிகங்களாக கொண்டு ஒவ்வொரு பதிகமும் பதினோரு

[illegible] கொண்டு பதினோறாவது பாடலில், பாடலை பயில்வதால் ஏற்படும் பயனை குறிப்பிட்டுள்ளார். அதேபோல் இந்த நூலினைப் பயில்வதால் ஏற்படும் பயனாகப் பதிக நூற்பயன் என்று ஏழு பதிகத்தின் இறுதியில் பதிக நூற்பயன் சுட்டப்பட்டுள்ளது. ஒவ்வொரு பதிகமும் தனித்தனி யாப்பு முறையினைப் பெற்று விளங்குகின்றது. பெரும்பாலும் இப்பாடல்கள் விருத்தப்பா வடிவில் காணப்படுகின்றன.

## நூற்பொருள்

'ஏழு பதிகம்' என்னும் இந்நூலில் பாடப்பட்ட எழுபது பாடல்களும், 'அம்மனை' போற்றிப் புகழும் பாடல்களாகவும், அம்மன் செய்த அருஞ்செயல்களை புகழ்ந்து கூறியும், மக்களை காத்தருள வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கும் பாடல்களாகக் காணப்படுகின்றன.

## ஏழு பதிகம் நூல்

### நேரிசை வெண்பா

காப்பு

ஆழும் திரைகடற்பார் அத்தனையும் ஈன்றளித்து 1
வாழும் கவுரி மலர்த்தாளில் - ஏழு
பதிகம் புனைவதற்குப் பாசாங் குசமும்
துதிகமழ்எண் டோளும் துணை

### முதலாவது பதிகம்

### அறுசீர் விருத்தம்

1. சீர்கெழு கோலங் காட்டித்
திருவருட் பெரும்பே றீந்து
பார்கெழு புகழும் வீடும்
படிறனேற் களிப்பாய் கொல்லோ?
நார்கெழு முனிவர் வேண்டும்
நலமெலாம் உதவும் நங்காய்!
வார்கெழும் இளங்கோ டுள்ளாய்!
மரகத வாலைத் தாயே! 2

2 தேனனீ குமுதச் செவ்வாய்

திறந்தொரு திருவாக் கோதிப்

பாமழை பொழியும் ஆண்மை

படைத்துள ரொடுசேர்த் தாள்வாய்;

காமவேள் பணியும் நாளிற்

கணைகளோர் ஐந்தும் ஈந்தாய்!

மாமலர்ப் பொகுட்டில் வாழும்

மரகத வாலைத் தாயே! 3

3. தந்திரம் முயல்வார் தம்மில்

தாழ்வுறுந் தமிய னேனும்

இந்திர கோடி போற்றும்

இனியசீர் விழைந்தேன் கண்டாய்;

சந்திரன் போலுந் சில்லோர்

தமதகத் தொளிரும் அம்மே!

மந்திர வித்தா நின்றாய்!

மரகத வாலைத் தாயே! 4

4. ஈனனென் றிகழ்ந்தி டாமல்
யானும்நின் னடிமை யாவான்
பானலங் கண்ணாற் சற்றே
பார்ப்பதற் கிரங்கு வாயோ
கூனல்விற் புருவப் பேதாய்!
குணங்களுக் கப்பால் நின்றாய்!
வானவர்க் கரிய தாளாய்!
மரகத வாலைத் தாயே! 5

5 நின்குழல் அவிழும் ஆயின்
நெற்றியங் கண்ணாங் ஆதி
என் குமெக் கடவு ளாரும்
இறப்பரென் றுணர்ந்தி லேனோ?
தன்குரு வாகி யார்க்குந்
தக்கபே றுதவச் சோம்பாய்
வன்குணக் கயவர் போற்றா
மரகத வாலைத் தாயே! 6

6. அண்டகோ டிகளை யெல்லாம்
அளிக்கும்நீ தொடைக்கும் போதுந்
தொண்டர்கண் டிருப்பா றென்றே
துணிந்துநான் சொலுந்நாள் என்றோ
வெண்டகைக் கமலப் போதில்
வீற்றிருந் தருளும் மின்னே!
வண்டமிழ்க் கிரங்கு மாதே!
மரகத வாலைத் தாயே! 7

7. சித்தரும் முனிவர் தாமும்
தேவருந் செறிந்து போற்றும்
அத்தனை கூட்டத் துள்ளே
ஆடையற் றிருந்த தேனோ?
முத்தமிழ்க் கடலுந் தோன்றும்
மூன்றெழுத் துருவ மானாய்!
மைத்தடங் கருங்கட் பேதாய்!
மரகத வாலைத் தாயே! 8

8. வேதனே முதலா வல்லோர்

விளம்புமோர் ஐவர் தாமுந்

சீதமா மலர்கொண் டேத்தும்

திருவடி தருவாய் கொல்லோ?

போதவா ரிதியே! ஞானப்

பொருப்பின்மேற் பொலியும் பொன்னே!

மாதவப் பெரும்பே றானாய்!

மரகத வாலைத் தாயே! 9

9. சத்திவேற் படையாய்க் கோடி

தனையர்தங் காத்தின் மேவி

எத்திறந் பகைவர் மார்பும்

இடந்துயிர் குடிப்பாய் அன்றோ?

முத்தியே நலமென் றோரும்

முனிவரை மடிமேல் நாளும்

வைத்தினி தளிக்கச் சோம்பா

மரகத வாலைத் தாயே! 10

10 சங்கர முனிவன் ஆதித்

தவர்கெலாம் அருட்பே றீந்தாய்;

எங்களுக் கிரங்கா யாகில்

இழிவுனைப் பொருந்துங் கண்டாய்;

பங்கமார் மதுவூ னுன்போர்

பயங்கொள்வே றுருக்கொண் டார்ப்பாய்!

மங்களம் முழுதும் தானாம்

மரகத வாலைத் தாயே! 11

11. சேணுறும் பொழிற்சீர் மேவுந்

திருநெல்வே லியில்வந் துள்ளான்

வாணுதற் குயிலே போலும்

மரகத வாலைத் தாயைப்

பேணுமிக் கவியோர் பத்தும்

பேசிடும் பெரியோ ரெல்லாம்

தூணுள்நின் றுதிர்தோன் போலும்

சுகமடைந் திருப்பா ரன்றே 12

முற்றிற்று

## இரண்டாவது பதிகம்
## எழுசீர் விருத்தம்

1. நண்ணிய வொருவன் பெறும்பலன் எனநீ
நல்கிட நான்உதித் தனனேல்
எண்ணிய வாறே உலகினில் விளையாட்
டியற்றிநின் பதம்புக இசைப்பாய்
திண்ணியர் உணரும் திருவருட் கடலிற்
திரண்டஇன் னமுதமே! திகழும்
புண்ணியம் எல்லாம் மலிவுற வளர்த்தாய்!
புவனம்ஈன் றருளிய பொன்னே! 13

2. வெற்புநேர் முலைப்பால் அளவிலாப் பெருஞ்சீர்
விளைக்குமென் றறிஞர்நூல் விளம்புஞ்
சொற்புகு மனத்தேன் மகிழ்வுறக் கருணை
சுரந்தெழில் மயிலெனத் துலங்காய்;
கற்புமிக் குடைய கருங்குயிற் பெடையே!
கவிஞனுக் கமுதிடுங் கையாய்!
பொற்புறு கமல உந்தியாற் சகல
புவனம்ஈன் றருளிய பொன்னே! 14

3. பாவவழுக் கிரங்கு ழுனைச்சிலர் மதுவூன்
படைத்தீருச் சனைசெய்வா ரெனக்கேட்டு
உரமெலாம் புண்ணாத் துடித்துடித் தயரும்
உண்மை நீ யுதவிய தன்றோ?
குரவையுந் தழுவா நலமுறுங் கிளியே
குஞ்சரப் பிடியுருக் கொண்டாய்!
புரமெரித் தவனைப் பாதியி லமைத்தாய்
புவனம்ஈன் றருளிய பொன்னே! 15

4. சீதவெண் மதியம் புனைந்தவன் வணங்கித்
திருக்கையாற் றினமெடுத் தணியும்
பாதபங் கயமென் மனத்துளே யிருந்தும்
பரதவித் துழன்றனைன் கண்டாய்;
நாதத்த் துவமா வெளியெல்லாம் நிறைந்த
நங்கையே! நாரியர்க் கரசே!
போதனைப் பயந்தா னுடன்முன்நாள் உதித்தாய்
புவனம்ஈன் றருளிய பொன்னே! 16

5. ஐயமுற் றழுங்குந் தமியனேன் மனத்துன்
அருட்செயல் வலியவந் தந்நாள்
மெய்யதை யிவ்வா றெனப்பெரி துணர
விளக்கியும் வெருண்டன னந்தோ!
செய்யதா மரையிற் றிருவென இருந்தாய்!
தெளிவுறும் மறையெலாஞ் செய்தாய்!
பொய்யருக் கிரங்காத் திருவுள முடையாய்!
புவனம்ான் றருளிய பொன்னே! 17

6. குன்றுதோ றாடுங் குகனொடு பவளக்
குஞ்சர முகவனோர் மதலை
என்றுநா னுன்பா லிலங்கிடப் புரிந்தாய்!
எவருனை இகழ்பவர்? இயம்பாய்;
மன்றுணின் றாடும் பொழுதினும் பிரமர்
மணிமுடித் தலைகளும் வானிற்
பொன்றுவா ரெலும்பும் புனைபவன் மகிழப்
புவனம்ான் றருனிய பொன்னே! 18

7. செங்கண்மால் புகழும் திறமையும் மலர்மேற்
திகழ்பவன் மகிழ்கவிச் சிறப்புந்
தங்கநின் னருட்சீ ரெளியனேற் குதவுந்
ததியிதென் றறிகிலாய் கொல்லோ
திங்கள்வார் சடையிற் புனைந்தவன் உரத்தில்
திடுக்குறத் திருநடஞ் செய்தாய்
பொங்கரா வரசைச் சிறுவிரற் கணிந்தாய்
புவனம்ஈன் றருளிய பொன்னே! 19

8. படைப்பவன் முதலாம் ஐவரும் பரவும்
பதுமமா மலர்நிகர் பதங்கள்
கிடைப்பதே கருதித் தவிக்குநான் மகிழக்
கிருபைகூர்ந் துதவுநாள் உளதோ?
சடைத்தலைப் பரமன் களிப்புறத் துளங்குந்
தவளவாள் நகைக்கருங் குயிலே
புடைத்தெழுந் திருமாந் திலங்கிய முலையாய்
புவனம்ஈன் றருளிய பொன்னே! 20

9. பாலுறு நெய்போ லெங்கணு நிறைந்த
பரமர்தந் திருவருட் பாங்கால்
வேலுரு வாகி முருகவேள் கரத்தில்
விளங்கிய தில்லையோ? விளம்பாய்;
சேலுறு கருங்கட் சித்திர மனையாய்
தினந்தொழு மவர்மன விருப்பம்
போலுரு வெடுக்கும் புனிதையே! யளவில்
புவனம்ஈன் றருளிய பொன்னே! 21

10. ஆரண முடிவைத் தெரிந்துளங் களிக்கும்
அறிஞனாம் சங்கரன் அந்நாள்
வாரணத் திரளிற் சீயமொத் துலவ
வரங்கொடுத் தாண்டனை யன்றோ?
நாரண னுடனோர் முட்டையி லுதித்தாய்!
ஞானமே வடிவமா விளங்கும்
பூரணப் பொருளின் வலிமையே யானாய்
புவனம்ஈன் றருளிய பொன்னே! 22

11. திகழுறு மதிளுஞ் சோலையுந் சூழும்

திருநெல்வே லிப்பில்வரும் சிறுவன்

புகர்முகக் களிறும் முருகனும் போலும்

புவனமீன் றருளிய பொன்மேற்

பகர்தமிழ்ப் பதிகக் கவியொரு பதமே

படிப்பவர் மிடியறும்; பகைபோம்;

நிகரில்வாழ் வுண்டாய்ப் புகழொடு வாழ்வார்

நீதியும் வழுவுறா ரன்றே! 23

முற்றிற்று

## மூன்றாவது பதிகம்

### அறுசீர் விருத்தம்

1. தவமுயல் கிலனுன தடியவர்

புகழ்பகர் தன்மையு மெய்துகிலேன்

எவனுனை விழிகொடு தெரிசனை

புரிவதி ரங்கிய ளித்தாள்வாய்;

பவமுழு மையுமற வொருகுறு

நகைபுரி பண்புறு பைங்கிளியே!

சிவமுத லியபலர் வழிபட

நிலவிய திருவருள் வடிவாளே! 24

2. முத்தமிழ் கற்றுய ரன்பொடு
நின்றுதி மொழிபவ ரென நாயேன்
அத்தனை பேறுபெ றும்படி
நாடியு ளயர்வ து நிசமன்றோ?
பத்தர்ம னத்தில்ந டம்புரி
யும்பத பங்கய மென்கொடியே!
சித்தர்க ளுக்கொரு தாயக
மாகிய திருவருள் வடிவாளே! 25

3. கொங்கண ணாதிய சித்தர்க
ளுக்கருள் கோகன கத்தாளை
எங்கள்பெ டுந்துயர் தீரவ
ளித்திடில் யாவர்த டுப்பாரோ?
துங்கமி கும்பல வாளவு
ணப்படை துஞ்சிட முன்செய்தாய்!
சிங்கம திற்றிரி சூலமு
டன்றிகழ் திருவருள் வடிவாளே! 26

4. எவ்வகை யாகிய தெய்வமும்
நீயென யானுன ரச்செய்தாய்
பௌவமெ னுந்துயர் போய்மகி
ழும்படி பார்வைகொ டென்றருள்வாய்?
ஒவ்வரி தாமொரு மெய்ப்பொரு
ளாமவ னுள்ளமு ணர்ந்தாளே
தெவ்வர்நி ணம்படும் வாளுடன்
ஆடிய திருவருள் வடிவாளே! 27

5. தங்கம லைச்சுவ டன்னத
னத்துறு தண்ணமு தத்தாலென்
பங்கம றும்படி செய்துனை
நம்பிய பத்தரு டன்சேராய்
கொங்கவி ழும்பல மாலிகை
சூடிய குழலுறு மிளமாதே
செங்கண்மு ராரியு யுமாகிவி
ளங்கிய திருவருள் வடிவாளே! 28

6. அற்பர்த் லைக்கடை வாயில்கள்

தோறும்அ லைந்துவ ருந்தாதுன்

பொற்பமை யத்தமிழ் பாடிம

கிழ்ந்துயர் போதம ளித்தாள்வாய்

விற்பனர் ராமவ ரேபணி

யுஞ்சிறு மெல்லிய லாமம்மே!

சிற்பர தத்துவ மூடுகு

லாவிய திருவருள் வடிவாளே! 29

7 பாவுடை யாரொடு கூடியு

னைத்துதி பாடியி றைஞ்சாமற்

பூவுடை யாருடனே மனை

வென்றுயர் போதம டைந்தோரார்?

காவுடை யார்பல ரென்பொடு

சூலக பாலம ணிந்தேறுஞ்

சேவுடை யானிட மேகுடி

யாகிய திருவருள் வடிவாளே! 30

8. மைவளர் கண்டன்ம யேகன் உ

ருத்திரன் மாலயன் என்றோதும்

ஐவர்க ளுந்தொழு நின்பத

மேகதி யாமெனல் வம்பாமோ?

பெய்வளை யார்அர சாமென

நின்றபெ ரும்புக முள்ளாளே!

தெய்வமெ லாமுரு வாகவி

ளங்கிய திருவருள் வடிவாளே! 31

9. நீவடி வேலுரு வாவளர்

கையொடு நின்றவர் தம்மோடே

யாவரெ திர்க்கினு மாய்வர்எ

னுந்தெளி வெய்தியும் நைவேனோ?

பாவல வன்பிற கேமகள்

போலுறு பைங்கிளி யே!பொன்னூர்த்

தேவர்த மக்கரி தாயதெ

னத்திகழ் திருவருள் வடிவாளே! 32

10 எம்மத வாணரி றைஞ்சலும்

ஓர்பொரு ளென்றுண ருஞ்சீரான்

மும்மல நோய்தவிர் சங்கர

மாமுனி முன்வரல் பொய்யாமோ?

வெம்மழு வாளிவ ணங்கிட

ஊடல்வி டுத்தணை யும்பூவாய்!

செம்மணி போலுமி ருந்தவ

ளே!உயர் திருவருள் வடிவாளே! 33

11. நீரின்வ ளந்தவி ராதந

லம்பெறு நெல்லையில் வந்துள்ளான்

சீரிசை யுங்கிளி போல்விளங்

கியதிரு வருள்வடி வாண்மேற்

பாரின ருங்களி கூரவி

ளம்பிய பதிகம் துரைசெய்வார்

ஆரிய னுந்திரு மாலுமெ

னும்படி யகமகிழ் வடைவாரே! 34

முற்றிற்று

## நான்காவது பதிகம்

## கலிநிலைத் துறை

1. பயிலாக மஞ்சற்று முணராத நடைதுன்று பகையாளர்தாம்
வெளிலோனெ திற்பட்ட பனியாகி டச்செய்யும்
கயிலாய மேல்வந்து முட்டித்தி ரும்புங்க ளிப்பாளனா
மயிடாசு ரன்றன்னை வதைசெய்து நடமாடும் மகமாயியே
35

2. குலையாத ஈரக்க டற்குட்கி டந்துங்கொ திக்கின்ற நான்
புலையோர்த மைக்கொல்லு நமனாகி மகிழ்கின்ற பொழுதுள்ளதோ?
சிலையாளர் பலகோடி மடிவாக விடுகின்ற திரிசூலியே
மலையோரி ரண்டென்ன மிளர்கொங்கை யொடுநின்ற மகமாயியே. 36

3. பலர்பெரும் பகைகொண்டு சிலர்நொந்து னருள்கண்டு பணிகின்ற நாள்
உலகமெங் கணுநின்று மொருவனுக் கருளாண்மை உதவாததேன்
அலகறும்பல் பேய்களொடு பாலைதனி லாடியனி கூருவாய்
மலரவன் றலைதுன்று பலியுண்டு பசிதீரும் மகமாயியே 37

4. தகர்முதற் பகர்கின்ற-விருகங்க ளரிகின்ற தலைகையோர்களைத்

திகழ்வயப் படைகொண்டு னெதிர்வெட்டும் அவன்மீது சினமாவையோ

சகளநிட் களமாகு மரணாவி கொள்ளத்த ருக்குமாறுமுன்

மகமுயன் றிருதக்க னிருகூறு படமோது மகமாயியே 38

5. பொதுவாள ரென்னத்தி கழ்ந்தந்த ரங்கம்பு றம்பாகுவோர்

கதுமென்று நாசப்ப டச்செய்ய நாடிக்க ருத்தஞ்சினேன்;

பதுமாச னத்துற்றி ருக்கின்ற மடவார்கள் பணிகொள்ளுவாய்

மதுவாதி கொடுபூசை புரிவாரை முனிகின்ற மகமாயியே. 39

6. சஞ்சலப் பேயைத்த கர்த்துன்னை நாடித்த வஞ்செய்ததால்

நெஞ்சகத் தானந்த முற்றோர்த மைக்காண நினைவாகினேன்;

கஞ்சனைப் பெற்றோனி ரத்தங்கு டிக்குங்க டுங் கொபியே

வஞ்சரைத் தண்டால டித்துச்சி தைக்கின்ற மகமாயியே! 40

7. அக்கினைத் திருநீறு டன்பூணு வாருக்கு ளஞ்சானெனில்

தெக்கிருக் குங்கோனு ரத்தைக்கி ழித்துத்தி ரும்பாய் கொலோ

இக்கினன் கண்டஞ்சு கோரச்சொ ரூபத்தி னெண்டோளியே!

வக்கிரத் தந்தக்க ருங்காளி யேதுங்க மகமாயியே.

41

8. பூமேலி ருப்போன்மு தற்சொல்லு மைவகைப் புத்தேளிருந்

தாமேவ ணங்குந்தி ருத்தாளெ னக்கென்று தருவாய்கொலோ?

நாமேன டிப்பாணமு தற்கோடி வடிவான நந்தெய்வமே

மாமேரு வொக்குந்த னத்தம்மை யேவெற்றி மகமாயியே.

42

9. கோலாக லச்சித்தி ரத்தோகை மீதிற்கு லாவுங்குகன்

வேலாயு தத்தாலு யர்ந்தாளை னுந்தன்மை வீணாகுமோ?

சேலார்வி ழிச்சத்தி யேநாக பாசத்தி ருக்கையுளாய்

மாலாம வன்றங்கை யாநங்கை யே!துங்க மகமாயியே!

43

10. ஓராறு மொன்றென்று ணர்ந்துண்மை ஞானத்து டன்சித்தியாஞ்

சீரார வாழ்சங்க ரன்போனி லாவுஞ்சி றப்பெய்துமோ?

காராயி ரம்போன்மு ழங்கோடு டுக்கைக்க ரத்தம்மையே;

மாராயு தங்கோடி நேர்கண்ணி யேகொற்ற மகமாயியே!

44

11. சிந்திற்ற டஞ்சூழு நெல்லைத்த லத்திற்றி ருப்பாவலன்

வந்திக்கு மன்பர்க்கி ரங்குங்கு ணங்கொண்ட மகமாயியைச்

சிந்தித்து ரைக்குந்த மிழ்ப்பாடல் பத்துந்தி னங்கூறுவோன்

தந்திக்கு லம்போலும் வீராதி வீரத்த ளச்சிங்கமே. 45

முற்றிற்று

## ஐந்தாவது பதிகம்

### கொச்சகக் கலிப்பா

1. போராடும் புலைச்சமையப் பொய்யெல்லா மழிவாகி

ஓரா று சமையமுமே யுலகமெங்கும் நிறையாதோ

காராருங் குழல்சரியக் கணவனுட னாடிநின்றாய்

யாராலு மளப்பரிதா மைந்தொழிற்கு முரியாளே 46

2. கொங்குலவு மலர்க்கூந்தல் கோதையாக வெல்லோரும்

எங்குநிறை தாயாநீ யென நாடப் பெறுவேனோ

செங்குருதி வடிவாளே திருநீற்றுக் கப்பரையாய்

அங்குசபா சம்புனைந்தா யைந்தொழிற்கு முரியாளே

47

3. நாயினுங்கீழ்க் கடையாய நானுமுன தடியார்போல்

நீயிருந்து விளையாடும் நிலையுணர்ந்து மகிழ்வேனோ

பேயினங்கள் பலசூழப் பெருங்காட்டில் வீற்றிருந்தாய்

ஆயிரமா முகங்கொண்டா யைந்தொழிற்கு முரியாளே.

48

4. நம்புமடி யவருள்ளம் நடுநடுங்கப் பலவாறு

வம்புசெய்யுங் கொடியார்தம் வாழ்வழியப் பாராயோ?

சிம்புளென வந்தசிவன் சிந்தையினுள் வீற்றிருந்தாய்

அம்புநிகர் கண்ணுடையா யைந்தொழிற்கு முரியாளே

49

5. கோதிலாச் செந்தமிழ்பாக் கொண்டுனது புகழெல்லாம்

ஓதினார் தங்களுட னொருவனென வாழ்வேனோ

மேதிமேல் வந்தெதிர்ப்போன் வீறழித்து வெற்றிகொள்ளும்

ஆதிநா ராயணியே யைந்தொழிற்க முரியாளே.

50

6. ஈனந்த விரிந்தவல்லோ ரெனையுநின் னடிமையென

ஞானந்த ருங்கமல நாண்மலர்த்தாள் சூட்டுலையோ

வானந்த னிலிருப்போர் வந்துதொழு மரகதமே

ஆனந்த வாரிதியே யைந்தொழிற்கு முரியாளே.

51

7. வெயிலோடு நிலவெறிக்கு மேதினியெல் லாந்துதிக்குங்

குயிலேயென் றநுதினமுங் கூவுமொழி கேட்டிலையோ?

எயின் மூன்றுஞ் சுட்டபிரா னிடப்பாகத் திருந்தாளே

அயினேரும் வழியணங்கே யைந்தொழிற்கு முரியாளே.

52

8. வேதன்முத லைவர்களும் விரைமலராற் பூசைபுரிந்து
ஏதமறுந் துதிகூற இரங்கியருள் செய்திலையோ
போதவிளக் கொளியாய பூரணியே! காரணியே
ஆதவரிற் குழைபூண்டா யைந்தொழிற்கு முரியாளே

53

9. வேலாக நீயிருந்து விளங்குமெழிற் கையுடையார்
மேலாவல் கொண்டோரும் வெருள்வதற்கு ஞாயமுண்டே
பாலாழி யிடத்தந்நாள் பரமனுயிர் போகாமல்
ஆலாலந் தனைத்தடுத்தா யைந்தொழிற்கு முரியாளே

54

10. இன்பமுதற் பலவாறு மினிதுணர்ந்த சங்கரன்போல்
உன்பதத்துக் காளாகி யொளிருநலந் தருவாயோ
பொன்பரவு மெழிலுடையாய் பொறித்தலைப்பாம் பணிபூண்டாய்
அன்பர்மனப் படிநிற்பாய் ஐந்தொழிற்கு முரியாளே

55

11. நீடுபுகழ் மருவுதிரு நெல்வேலிப் பாவலனான்

ஆடுமொரு பரன்வேண்டு மைந்தொழிற்கு முரியானைப்

பாடுமியற் கவிபத்தும் படிகின்ற பண்டுடையார்

வாடுமவர் தமையெல்லாம் மகிழவைக்க வல்லாரே. 56

முற்றிற்று

## ஆறாவது பதிகம்

### எண்சீர் விருத்தம்

1. பத்தருக்குஞ் சித்தருக்கும் முனிவோ ருக்கும்

பாவலர்க்குங் காவலர்க்கும் பணிகின் றோர்க்குஞ்

சித்தமகிழ்ந் தளித்த புக ழெல்லாம் வேண்டுஞ்

சிறுவனேஞ் கிரங்கியருள் செயும்நா ளுண்டோ?

புத்தருக்குஞ் சாரணர்க்குங் கொலையோ ருக்கும்

புலையோர்க்கும் எமனாவார் போற்றும் பொன்னே!

எத்தனையோ கோடியுரு எடுத்து நின்றாய்!

எவ்வுயிர்க்குஞ் தாயாகி இருந்த மாதே! 57

2. கானவரி வண்டனைய விழியார் எல்லாம்

கழறரிய நின்வடிவாக் காண்போர்க் காகும்

ஞானவடி வாள்விரும்பி மெவியும் நாயேன்

நானிலத்தோர் இகழ்வதஞ்சி நலிய லாமோ

தேனமருங் கொன்றையொடு தும்பை சூடுஞ்

சிவபெருமான் மனங்குளிரச் சிரிக்கும் வாயாய்

ஈனர்களுக் கெள்ளவு மிரங்கா தாளே

எவ்வுயிர்க்குந் தாயாகி இருந்த மாதே. 58

3. விண்ணிருந்த தேவரெல்லாஞ் சூழ்ந்து போற்ற

விடைமீதிற் சிவனோடு விளங்கி யாண்டு

பண்ணிசைந்த வாய்திறந்தோர் மொழியுங் கூறிப்

பாலருட னெனைச்சேர்க்கும் பருவம் யாதோ?

உண்ணிறைந்த பேரொளியே வடிவ மாகும்

ஒருத்தியே தினம்நாடி யுருகு வோருக்கு

எண்ணிறந்த கோடி சித்துங் கொடுக்க வல்லாய்

எவ்வுயிர்க்குந் தாயாகி இருந்த மாதே. 59

4. கொச்சைமொழி தோயாத மதுர வாக்குங்

குணங்களொடு குறிகடந்து குலவுஞ் சீரும்

பிச்சையெடுத் துண்டுயாந்தோர் நடுவே வாழும்

பெருமையுநீ யெனக்களிக்கப் பெறுநா ளென்றோ

செக்சையொடு கூதளஞ்சூ டிமய மன்னன்

திருமகளாய் மேனைமுலைத் தீம்பா லுண்டாய்

இச்சைமுதற் பகர்மூன்றுந் தானா நின்றாய்

எவ்வுயிர்க்குந் தாயாகி இருந்த மாதே 60

5. சந்திரா தித்தர்களைத் குழையாப் பூண்டு

தன்மயமா நிறைவுறு நீ தமிய னேன்முன்

மந்திரா திக்கமுள்ளார் விதித்த வாறு

மயில்போலத் துலங்கியருள் வழங்கு வாயோ

நொந்திரா வண்ணமன்பர் விருப்ப மெல்லாம்

நொடிக்குமுன்னே யளிக்கவல்ல நோக்கத் தாளே

இந்திரா தியருணராப் பெருமை யாளே!

எவ்வுயிர்க்குந் தாயாகி இருந்த மாதே! 61

ஏ அச்சமுத லாயமனக் குற்ற மெல்லாம்

அகற்றுவித்துன் னடியாருக் கடிமை யாக்கிச்

சொச்சமென நின்றபரா பரத்தைக் காட்டி

சுகக்கடலின் முழுக்காட்சிக் சோகந் தீர்ப்பாய்

மச்சமென வேலெனவா ளெனப்பல் லோரும்

வழக்காடத் திகழ்காவி மலர்க்கண் ணாளே

எச்சமயத் தவர்நூலு மிகழா வண்ணம்

எவ்வுயிர்க்ந் தாயாகி இருந்த மாதே 62

7. *சீதளசந் திரனனைய முகமும் வேய்போல்*

திகழுமிரு திருத்தோளுஞ் சிலம்பு கொஞ்சும்

பாதமலர்த் துணையுமற்றை யெழிலுந் தோன்றப்

படிறனேன் ஒருநாளிற் பார்ப்பேன் கொல்லோ

வேதமுட னாகமமுந் துதிக்க வாழு

மெல்லியலே யாவருக்கு மேலாந் தேவே

ஏதமறக் களையுமொரு மருந்தா நின்றாய்

எவ்வுயிர்க்குஞ் தாயாகி இருந்த மாதே 63

8. பூமன்முத லாவிளங்கு மைவர் தாமும்

புகழ்ந்தொழு முனதிருதாள் புனைய வேண்டி

யாமளையே கோமளப்பைங் கிளிளே என்னும்

எளியனேற்கி ரங்காம லிருக்க லாமோ

காமனுக்குங் கணையளித்த கருணை யாளே

கவிமாரி பொழியவைக்குங் கடைக்கண் ணாளே

ஏமனுயிர் துடிதுடிக்கப் புடைக்குங் கையாய்

எவ்வுயிர்க்குஞ் தாயாகி இருந்த மாதே 64

9. துலங்குமயிற் படையாகி முருகன் கையிற்

சுரர்மகிழக் தகுவரெல்லாந் தொலைய வாழும்

நலங்குலவு நீயிருந்துஞ் தமியேன் வாட

ஞாயமுண்டோ வினியோறு ஞான மீந்தாள்

கலங்குமன்பர்க் கஞ்சலென மொழியுஞ் செவ்வாய்க்

கற்பகமே யமுதொழுகுங் கலசக் கொங்கை

இலங்குமெழின் மயின்போலும் வடிவத் தாளே

எவ்வுயிர்க்கும் தாயாகி இருந்த மாதே 65

10. சமையமெல்லா மொருநிலையே யெனநன் கோர்ந்த
சங்கரமா முனிவன்மு தற் றக்கோர்க் கெல்லாம்
உமையெனவுங் காளியென்றும் வாணி யென்றும்
ஒருகோடி வடிவமெடுத் துதவி லாயோ?
அமைவரிய கொடுமைசெய்வோர் மடியத் தாக்கி
ஆடுகின்ற பேய்களுண்ண வளிக்கச் சோம்பா
இமையவர்தம் முடியுரையும் பாதத் தாளே
எவ்வுயிர்க்கும் தாயாகி இருந்த மாதே 66

11. பாவமெல்லா மறக்களையும் பொருநை யாற்றின்
பைம்புனல்சூழ் நெல்வேலிப் பதியில் வந்தோன்
யாவரெவ்வா றெண்ணிடினும் அவ்வா றோங்கி
எவ்வுயிர்க்குந் தாயாகி இருந்த மாதைப்
பாவனையில் அடங்காதா ளென்று தேர்ந்து
பரவியதாந் தமிழ்ப்பாடல் வாழ்வோ ராகிச்
சித்தர்களுளா டுறவாடுந் திறமை யோரே.

முற்றிற்று

## ஏழாவது பதிகம்

### எண்சீர் வண்ண விருத்தம்

குறிப்பு: தானதான தந்தன தனதன தனனா

1. அசமுயல் பன்றிப றவைகண முதலாம்
        அவைநுக ருஞ்சிலர் பகை முதிர் வுறலால்
வசமழி யுந்துயர் பெருகிய தமியேன்
        மகிழுந லந்தர வருவது முளதோ?
பசலைப டர்ந்தற நிமர்தரு முலையாய்!
        பனிவரை தந்தரு ளிளமயி லனையாய்!
நிகமுழு துந்திர ளொருவடி வுடையாய்!
        நினைபவர் நெஞ்சினில் நடமிடும் உமையே! 68

2. கலகமி டுஞ்சமன் வருவது கருதார்
        கபடமு றுஞ்சிலர் கொடுமையை யுணரார்
அலகில்ப வங்களு மிலையென மொழிவார்
        அனையவர் தங்களொ டுறுவது தவிராய்;
இலகிய குங்கும முலையமு தொடுநாள்
        எழின்மிகு சண்பையின் முனிகொள வருவாய்
நிலவணி யும்பரன் மகிழ்வுற வணைவாய்
        நினைபவர் நெஞ்சினில் நடமிடும் உமையே. 69

3. கொடியவர் தந்திரன் மடிவுற நிணமார்

குருதிந டந்தலை கடல்புக இடிபோல்

அடிபடும் வன்பறை யுடன்வர மடவார்

அழவம ரஞ்செயும் அடிமையும் உளவோ

படியதி ரும்படி யரிமிசை வருவாய்!

படைகள ணிந்தொளிர் பலபுய முடையாய்!

நெடியவர் தங்களை விரல்களில் அருள்வாய்!

நினைபவர் நெஞ்சினில் நடமிடும் உமையே. 70

4. மறைகள்வி ளம்பிய விதிவழி நடவார்

வளையமு னிந்தொரு நொடியினில் அடுவார்

தறையில்வ ரும்படி தவமுயல் பெரியோர்

தடமல ரின்றுகள் புனைவது பிழையோ

குறைவறு சுந்தர மரகத மயிலே

குரவையி டும்பலர் நடுவளர் குயிலே

நிறைவுறும் அம்பர னொடு மகிழ் கிளியே

நினைபவர் நெஞ்சினில் நடமிடும் உமையே. 71

5. சகளவி யன்பொருள் பலவுநின் அருளே
தழைவன வென்றுணர் தெளிவின ருடனே
துகளறு செந்தமிழ் நளதொழி பகர்சீர்
தொலைவில்பெ ரும்புகழ் தருவதின் மகிழேன்
அகளநி ரஞ்சன முழுமையு முணர்வாய்
அடியர்வி ரும்பிய படிபுரி தொழிலாய்
நிகளமெ னும்பழ வினையற முனிவாய்
நினைபவர் நெஞ்சினில் நடமிடும் உமையே 72

6. அறமுயல் கின்றவர் மெலிவுற விணைதீர்
அவமுழு தும்புரி பவர்களி கெடவோர்
திறல்வய வன்படை யொடுவரு மொருநாள்
சிறிதுனை நம்புமென் விழியெதி ருறுமோ
மறமலி யுந்திரி புரமெரி புரிவார்
மகிழவ ணைந்திதழ் அமுதருள் கொடியே!
நிறமிகு குங்கும வரையுறழ் முலையாய்
நினைபவர் நெஞ்சினில் நடமிடும் உமையே. 73

7. விரதமி ருந்துனை வழிபடும் அவர்மேல்

வெருளுறும் வஞ்சகர் பகைமிக வுடையார்

சரதமி லங்கிடு மொருதினம் வரினே

தமியனம கிழ்ந்திட லுளதென லறிவாய்

சுரதசு மங்கல வபிநய மயிலே

துவரிதழ் தந்தெனை யணையென விழலான்

நிரவுசு தந்தர மானுற வருள்வாய்

நினைபவர் நெஞ்சினில் நடமிடும் உமையே 74

8. விதிமுத லைந்தொழில் புரிபவர் தொழுநீ

வெளிறொளிர் பங்கய மலர்மிசை யுறுசீர்

கதிபெற வந்தவ ருணருவ தெனநூல்

கழறமெ லிந்தயர் தமியனை யருள்வாய்

மதியமு துண்பவர் பெருகிய சபையாய்

மணமலி சந்தன மெழுதிய தொயிலாய்

நிதிகளி ரண்டென மிளிர்கர மலராய்

நினைபவர் நெஞ்சினில் நடமிடும் உமையே 75

9. குபுகுபெ னும்படி களமிசை பலபேர்

குருதியு மிழ்ந்துயிர் விடவிடு மயிலா

விபுதர்தொ முங்குகன் வழிபடு முனையே

விழையுமெ எனஞ்சக மெலிவது தகுமோ

நபுசக முந்சிவை வடிவென வுணர்வார்

நவிலவி ளங்கிய விதிவழி புரைதீர்

நிபுணர வணங்கிய பதமல ருடையாய்

நினைபவர் நெஞ்சினில் நடமிடும் உமையே 76

10. அறிவுநி றைந்தமை தெளிதரு பெரியோர்

அரசென வந்துயர் புகழ்முழு துருசோர்

குறியுணர் சங்கர முனியெதிர் வருநீ

குமரன ருந்திய முலையமு தருள்வாய்

வெறிகமழ் பங்கய மலர்மிசை வளர்வாய்

விடவர வம்புனை பரமனை யணைவாய்

நெறிதவ றுங்கொடி யவருயிர் கவர்வாய்

நினைபவர் நெஞ்சினில் நடமிடும் உமையே. 77

11. மதனிர தந்தவழ் பொருநையின் வடபால்

வளருநெரு டுங்கழை வனமதில் வருசேய்

நிதநித மன்பொடு குருமொழி வழியே

நினைபவர் நெஞ்சினில் நடமிடும் உமைமேல்

இதமலி யுந்திரு வருள்பெறும் விழைவால்

இனிதுவி ளம்பிய கவியொரு பதுமே

சதமென நம்புந ரடியவர் பெறுவார்

தருநிழல் கொண்டொளிர் ரமநிய நதரே! 78

**நூற்பயன்**

நேரிசை வெண்பா

தாழும் சிறுமை தவிர்த்தாளம் சத்திக்காம்

ஏழு பதிகம் இயம்புவோர் - வீழுநலம்

அத்தனையும் பெற்றுமகிழ்ந் தன்பரெண்ணம் போல்விளங்குஞ்

சித்தனையும் காண்பார் தினம். 79

## பின்னிணைப்பு -1

செய்யுள் முதற்குறிப்பு அகராதி

(எண் - பாடல எண்)

செய்யுள் தொடக்கம் எண்


அ

அக்கினைத் திருநீறு 41

அச்சமுத லாயமனக் 62

அசமுயல் பன்றிப 68

அண்டகோ டிகளை 7

அற்பர்த லைக்கடை 29

அறமுயல் கின்றவர் 73

அறிவு நி றைந்தமை 77

ஆ

ஆரண முடிணுத் 22

ஆழும் திரைகடற்பார் 1

இ

இன்பமுதற் பலவாறு 55

ஈ

ஈனந்த விர்ந்தவல்லோ 51

ஈனனென் றிகழ்தி 5

எ

எம்மத வாணரி 33

எவ்வகை யாகிய 27

ஐ

ஐயமுற் றழுங்குந் 17

ஒ

ஒராறு மொன்றென்று 44

க

கலகமி டுஞ்சமன் 69

கா

கானவரி வண்டனைய 58

கு

குபுகுபெ னும்படி 76

குலையாத ஈரக்க 36

குன்றுதோ ராடுங் 18

கொ

கொங்கண ணாதிய 26

கொங்குலவு மலர்கூந்தற் 47

கொச்சைமொழி தோயாத 60

கொடியவர் தந்திரன் 70

கோ

கோதிலாச் செந்தமிழ்பாக் 50

கோலாக லச்சித்தி 43

ச

சகளவி யன்பொருள் 72

சங்கர முனிவன் 11

சஞ்சலப் பேயைத்த 40

சத்திவேற் படையாய்க் 10

சந்திரா தித்தர்களைத் 61

சமையமெல்லா

மொருநிலையே 66

சி

சித்தரும் முனிவர் 8

சிந்திற்ற டஞ்சூழு 45

சீ

சீதவெண் மதியம் 16

சீதளசந் திரனனைய 63

சீர்கெழு கோலங் 2

செ

செங்கண்மால் புகழுந் 19

சே
சேணுறும் பொழிற்சீர் 12
த
தகர்முதற் பகர்கின்ற 38
தங்கம லைச்சுவ 28
தந்திரம் முயல்வார் 4
தவமுயல் கிலனுன 24
தா
தாழும் சிறுமை 79
தி
திகழுறு மதிளுஞ் 23
து
துலங்குமயிர் படையாகி 65
தே
தேமலி குமுதச் 3
ந
நண்ணிய வொருவன் 13
நம்புமடி யவருள்ளம் 49
நா
நாயினுங்கீழ்க் கடையாய 48
நி

நின்குழல் அவிழும் 6

நீ

நீடுபுகழ் மருவுதிரு 56

நீர்ன்வ ளந்தவி 34

நீவடி வேலுரு 32

ப

பத்தருக்குஞ் சித்தருக்கும் 57

படைப்பவன் முதலாம் 20

பயிலாக மஞ்சற்று 35

பலவுவார்க் கிரங்கு 15

பலர்பெரும் பகைகொண்டு 37

பா

பாலறு நெய்போல் 21

பாவமெல்லா மறக்களையும் 67

பாவுடை யாரொடு 30

பூ

பூமன்முத லாவிளங்கு 64

பூமேலி ருப்போன்மு 42

பொ

பொதுவாள ரென்னத்தி 39

போ

போராடும் புலைச்சமையப் 46

ம

மதனிர தந்தவழ் 78

மறைகள்வி ளம்பிய 71

மு

முத்தமிழ் கற்றுய 25

மை

மைவளர் கண்டனம 31

வி

விண்ணிருந்த தேவரெல்லாந்59

விதிமுத லைந்தொழில் 75

விரதமி ருந்துணை 74

வெ

வெயிலோடு நிலவெளிக்கு 52

வெற்புநேர் முலைப்பால் 14

வே

வேதன் முதலைவர்களும் 53

வேதனே முதலா 9

வேலாக நீயிருந்து 54

# பின்னிணைப்பு- 2

## சொல்லடைவு

(அ)

அக்கினை 4

அங்குசபா 47

அச்சம் 62

அடியவர் 78

அண்டகோடி 7

அபிநயமயிலே 74

அம்பரனொடு 71

அமுதருள்கொடியே 73

அயினேரும் 52

அலகறும் 37

அலகில் 69

அற்பர் 29

அன்பர் 55

அனையவர் 69

(ஆ)

ஆகமமும் 63

ஆதவரிற் 53

ஆதிநாராயணியே 50

ஆயிரமா முகம் 48

ஆரணமுடிவை 22

ஆதியனுந் 34

ஆலாலந் 54

ஆனந்த வாரிதியே 51

(இ)

இக்கினன் 41

இச்சை 60

இந்திரா 61

இளங்கோடு 4

இளங்கோடு 2

ஈ

ஈனந்த 51

ஈனர்களுக்கு 58

உ

உந்தியாற் 14

உமை 66, 68, 69, 70, 71, 72, 73, 74, 75,76,77,78

ஊ
ஊடல் 33
எ
எமனாவார் 57
எயின் 52
ஏ
ஏமனுயிர் 64
ஒ
ஒருத்தியோ 54
ஒவ்வரி 27
ஓ
ஓதினார் 50
(க)
கஞ்சல் 65
கஞ்சனை 40
கடைக்கண்ணாளே 64
கண்ணியே 44
கண்ணுடையா 49
கண்டன் 31
கணவனுடனாடி 46
கணைகளோ 3
கப்பரையாய் 47
கபட முறும் 69
கயிலாய 35
கருங்கண் 21
கருங்காளி 41
கலசக்கொங்கை 15
கவிஞனுக்கு 14
கவிமாரி 64
கை
கவுரி 1
களிப்பாளன் 35
கா
காமவேள் 3
காமனக்கு 64
காரணியே 53
காராயிரம் 44
காவலர்க்கும் 57
காவுடையார் 30
காளி 66
கானவரி 58

கி

கிருபை 20

கு

குகன் 43, 78

குகனொடு 18

குஞ்சரப் பிடி 15

குஞ்சரமுகவனோர் 18

குமரன் 77

குரவை 15, 71

கூ

கூதளம் 60

கூனல் 5

கை

கைக்கரத்தம்மையே 44

கொ

கொங்கணணாதிய 28

கொங்குலவு 47

கொங்கவி 28

கொங்கை 36

கொச்சைமொழி 60

கொரு பூசை 39

கொலையோர்க்கு 54

கொற்ற 44

கோ

கோகனகம் 26

கோகையர் 47

கோநிலா 50

கோமள 64

ச

சகநிட்களமாகும் 38

சங்கரமா முனிவன் 66

சங்கர முனி 77

சங்கரமுனிவன் 11

சங்சரன் 33,44,55

சஞ்சல 40

சடைத்தலைப்பிரமன் 20

சண்பையின் 69

சத்தி 10

சந்திரன் 4

சந்திராதித்தர் 61

சமன் 69

சரதமிலங்கிடும் 74

சா

சாரணர்க்கு 57

சி

சிங்கமதில் 26

சித்தர் 8,25, 26

சித்தர்கள் 67

சித்தனையும் 78

சித்தருக்கு 57

சித்தரத்தோகை 43

சித்திரமனையாய் 21

சித்து 59

சிம்புளென 49

சில்லோர் 4

சிலம்பு 63

சிலையாளர் 36

சிவபெருமான் 58

சிவன் 49

சிவனோடு 59

சிற்பர 29

சீ

சீதமாமலர் 9

சீதளசந்திரன் 63

சீயமொத்துலவ 22

சு

சுந்தரமரகத மயிலே 71

சுரதசுமங்கல 74

சுரர் 65

சூ

சூலக 30

செ

செங்கண் 28

செங்கணமால் 19

செச்கையொடு 60

செம்மணி 33

சே

சேணு 12

சேலார் 43

சேலுறு 21

சேவுடை 30

சொ

சொச்சமென 62

சோ

சோம்பாய் 6

ஞா

ஞானமே 22

ஞானவடிவான் 58

த

தகர் 37

தண்டாலடித்து 40

தந்திரன் 70

தமியனேன் 4

தா

தாயாகி 57,58,59,60,61,
62,63,64,65,66,67

தி

திண்ணியர் 12

திரிசூலியே 36

திருக்கை 16

திருநெல்வேலி 12

திருமகளாய் 60

திருவருள் 25,24,26,27,
28,29,30,31,32,33,34

தீ

தீம்பால் 60

து

துங்க 26

துஞ்சிட 26

தும்பை 58

துலங்காய் 14

துலங்கு 65

தெ

தெவ்வர் 27

தே

தேவர் 32

தேவரும் 8

தேவரெல்லாம் 59

தொ

தொண்டர் 7

தொயிலாய் 75

ந

நங்காய் 2

நங்கையே 43,16

நடுவளர் 71

| | | | |
|---|---|---|---|
| நதரே | 78 | நை | |
| நபுசகமும் | 76 | நைவேனோ | 32 |
| நமனாகி | 36 | ப | |
| நா | | பகைவர் | 10 |
| நாகபாசத்தி | 43 | பங்தய மலர் | 77,74 |
| நாசப்பட | 39 | பசலை | 68 |
| நாத | 16 | பணிகின்றோர் | 59 |
| நாமவரே | 29 | பண்ணிசை | 59 |
| நாயேன் | 58,25 | பதிகம | 13 |
| நார்கெழு | 2 | பதுமாசன | 39 |
| நாரியர் | 16 | பத்தருக்கு | 57 |
| நாரணனுடனோர் | 22 | பத்தர் | 25 |
| நி | | பரமனுயிர் | 54 |
| நிசமன்றோ | 25 | பரமனையனை | 77 |
| நிணம் | 27 | பராபரத்தை | 62 |
| நிபுணர | 76 | பறவை | 68 |
| நிரஞ்சன் | 72 | பருவன் | 59 |
| நிரவு சுதந்தர | 74 | பன்றி | 68 |
| நிலவணியும் பரன் | 69 | பா | |
| நெ | | பாசங்குசமும் | 1 |
| நெடியவர் | 70 | பாத பங்கயம் | 16 |

| | |
|---|---|
| பாதமலர் | 63 |
| பாலருடன் | 59 |
| பாலாழி | 54 |
| பாவலர்க்கு | 57 |
| பாவலனான் | 56 |
| பாவனை | 67 |
| பி | |
| பிரமர் | 18 |
| பிச்சையெடு | 60 |
| பு | |
| புகர்முதம் | 23 |
| புத்தருக்கு | 57 |
| புத்தேளிரும் | 42 |
| புலைச்சமைய | 46 |
| புலையோர் | 57,36 |
| புவனம் 13,14,15,16,17, 18,19,20,21,22,23, | |
| புனிதையே | 21 |
| பூ | |
| பூமன் | 64 |
| பூமேலி | 42 |
| பூரணம் | 22 |
| பூரணியே | 53 |
| பெ | |
| பெடையே | 14 |
| பே | |
| பேயினங்கள் | 48 |
| போரொளி | 59 |
| பை | |
| பைங்கினியே | 24,64 |
| பொ | |
| பொகுட்டில் | 3 |
| பொய்யருக்கு | 17 |
| பொருநை | 67 |
| பொன்னே | 57 |
| போ | |
| போதனை | 16 |
| பௌ | |
| பௌவமெனும் | 27 |
| ம | |
| மகமாயி | 43,44 |

| | | | |
|---|---|---|---|
| மகமாயியே | 35,36,37,38,39,40,41,42,43,44 | மன்னன் | 60 |
| | | மா | |
| மகமுயன்றிரு | 38 | மாதவம் | 9 |
| மங்களம் | 11 | மாதே | 57 |
| மசசமென | 62 | மாமுனி | 33 |
| மடவார்கள் | 39 | மாராயு | 44 |
| மதலை | 18 | மாலயன் | 31 |
| மதனிரகற் | 78 | மாலா | 43 |
| மதிளும் | 23 | மி | |
| மதுரவாக்கு | 60 | மிடலார் | 70 |
| மதுவாதி | 39 | மு | |
| மந்திரவித்தா | 4 | முட்டை | 22 |
| மந்திராதிக்கம் | 61 | முத்தமிழ் | 8 |
| மயிடாசுரன் | 35 | முத்தயே | 10 |
| மயில் | 61 | முயல் | 68 |
| மயேசன் | 31 | முராரியு | 28 |
| மரகதமே | 51 | முருகவேள் | 21 |
| மரகதவாலை | 2 | முருகன் | 65 |
| மலரவன் | 37 | முலைப்பால் | 14 |
| மலையோர் | 36 | முனிகின்ற | 39 |
| மன்றுணி | 18 | முனிவோர் | 57 |

முனிவர் 2
மூ
மூடுகுலாவிய 28
மை
மைத்தடங்கருங்கண் 8
வ
வக்கிர 41
வஞ்சகர் 74
வஞ்சரை 40
வண்டமிழ் 7
வரவம் 77
வன்குணக்கயவர் 6
வா
வாணி 66
வார் 2
வாரண 22
வாரிதியே 9
வாளவுணப்படை 26
வானவர் 5
வி
விபுதர் 76
விழியார் 58
விரதம் 74
விருகங்களரி 38
விற்பனர் 29
வீ
வீரதளச்சிங்கமே 45
வீராதி 45
வெ
வெண்டகை 7
வெம்மழு 33
வெற்பு 14
வே
வேதனே 9
வேதமுடன் 63
வேதன் 53
வேயி 63

# துணைநூற்பட்டியல்


1. சிற்றிலக்கிய வளர்ச்சி - சண்முக பிள்ளை, அபிராமி அச்சகம், சிதம்பரம்
2. வண்ணச்சரகம் தண்டபாணி சுவாமிகள் வரலாறு - தி.செ. முருகதாச சுவாமிகள், சிரவைக் கௌமார , சபை வெளியீடு
3. தமிழ் சிற்றிலக்கிய வரலாறு - மு. பொன்னுசாமி, இந்து பதிப்பகம்,கோயம்புத்தூர்.